## பத்திரிக்கை செய்தி

### தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

கூடலூர் வட்டாரத்திற்கு உட்பட்ட ஸ்ரீமதுரை ஊராட்சி மற்றும் நெலாக்கோட்டை ஊராட்சியில் வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்க கீழ்காணும் தகுதி உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பங்கள் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், 1பி பிளாக், கூடுதல் மாவட்ட ஆட்சியர் வளாகம், பிங்கர் போஸ்ட், உதகை, நீலகிரி மாவட்டம் 643 005 என்ற முகவரிக்கு 7.02.2023 மாலை 5.00 மணிக்குள் வந்து சேர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

<u>பணியின் பெயர் – வட்டார ஒருங்கிணைப்பாளர் மதிப்பூதியம் – ரூ.12,000/–</u>

<u>தகுதிகள்</u>

1. ஏதாவதொரு பாடத்தில் பட்டப்படிப்பு படித்திருத்தல் வேண்டும்.
2. குறைந்த பட்சம் 3 மாதம் MS Office சான்றிதழ் பயிற்சி படித்திருக்க வேண்டும் (அல்லது)
   கணினி அறிவியல் அல்லது கணினி சார்ந்த படிப்பில் பட்டப்படிப்பு படித்திருக்க வேண்டும்.
3. 35 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
4. இத்திட்டம் குறித்து குறைந்தது 2 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
5. சம்மந்தப்பட்ட வட்டாரத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
6. பெண் பாலித்தினராக இருக்க வேண்டும்.